முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
அசல் வழக்கு எண் – 185/2019

**பிரதிவாதி தரப்பு சாட்சி–1 சைமன் – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 29.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:</u>**

1) எனது தோட்டத்தில் மகாமுனி மற்றும் அவரது மகன் கருப்பன் ஆகியோர் வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்றால், எனது தகப்பனார் காலத்தில் இருந்தார்கள். பின்னிட்டு எங்களுக்குள் பாகப்பிரிவினை பிரச்சினை வந்தபோது சென்றுவிட்டார்கள். சர்வே எண் 105/2 மொத்த விஸ்தீரணம் 4 ஏக்கர் 22 செண்ட் என்றால் சரிதான். இதில் 22 செண்ட்டை மட்டும் எனது மனைவி 2ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மென்ட் செய்துள்ளேன் என்றால் சரிதான். மீதமுள்ள 4 ஏக்கர் என்வசம்தான் உள்ளது என்றால் சரிதான். நான் 22 செண்ட் நிலத்தை எப்போது பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்காக கொடுத்தேன் என்றால் 2005ம் வருடம் கொடுத்தேன். என்ன ஆவணமாக எழுதிக் கொடுத்தேன் என்றால், எழுதிக் கொடுத்தேன், என்ன ஆவணம் என ஞாபகமில்லை. அந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் செய்திருக்கிறேன்.

2) 2ம் பிரதிவாதி சொந்தமாக வீடு கட்டியுள்ளாரா என்றால், நான்தான் கட்டினேன். அதன் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண் 106 ஆகும். நான் எனது மனைவிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் ஆவணத்தை அடமானமாக வைத்துதான் 3ம் பிரதிவாதியிடம் இருந்து எனது மனைவி கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி கடன் சர்வே எண் 106ல் உள்ள வீடு கட்டுவதற்காகத்தான் வாங்கினோமா என்றால் ஆமாம். எனது மனைவி சர்வே எண் 105/2ல் வீடுகட்டுவதாக கடன் வாங்கி, சர்வே எண் 106ல் வீடு கட்டியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் எனது பெற்றோரை அவர்களின் இறுதிகாலம் வரை பார்த்துக்கொண்டதாக முதல் சாட்சியத்தில் சொல்லியுள்ள நிலையில், அவர்களை எவ்வாறு பார்த்துக் கொண்டேன் என்றால், அவர்கள்

இருவரும் ஓய்வூதியதாரர்கள். அவர்கள் யாருடைய தயவும் இன்றி தன்னிச்சையாக அவர்களை பார்த்துக் கொண்டார்கள்.

3) எனது பெற்றோரிடம் பள்ளிக்கூடத்தை என் பெயருக்கு எழுதித் தரச்சொல்லி கேட்டு அவர்கள் மறுத்ததால் அ.வ.எண்.168/2001 என்ற வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் அரசாங்கமோ, எனது பெற்றோரோ, பள்ளி வளாகத்திற்குள் நுழைந்து நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என தடை உத்தரவு கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 தான செட்டில்மென்ட் ஆவணத்தில் எனது சகோதர சகோதரிகளுக்கு சொத்து கொடுக்காதது பற்றி எனது தாயார் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.1 சொட்டில்மென்ட் ஆவணத்தில் கடைசி பக்கத்தில் எழுதி வாங்குபவர் என்ற இடத்தில் நான் கையெழுத்து போட்டுள்ளேன் என்றால் சரிதான்.

4) பி.சா.ஆ.1 ஆவணத்தில் இன்னார் என்று நிரூபித்தவர்கள் என்ற இடத்தில் பெரியசாமி, ராமன் கையெழுத்து போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 2005ம் வருடம் செப்டம்பர் மாதம் 8ம் தேதி 4-5 மணிக்கிடையில் ஆவணம் தாக்கல் செய்ய கட்டணம் ரூ.2040/- செலுத்தியதாக கண்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து எனது தாயார் தன் விருப்பத்தின் பேரில் பி.சா.ஆ.1 செட்டில்மென்ட் ஆவணத்தை எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. நான்தான் எனது தாயார் உடல்நிலை சரியில்லாத போது அவர்களை ஏமாற்றி அழைத்து சென்று பி.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி வாங்கிக்கொண்டேன் என்றால் சரியல்ல. எனது பெற்றோர்களின் விருப்பத்திற்கு மாறாக நடந்து கொண்ட எனக்கு, எனது தாயார் செட்டில்மென்ட் ஆவணம் எழுதி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

5) சிந்தாமணிப்பட்டி காவல் நிலையத்தில் எனது தகப்பனார் எனக்கு எதிராக பள்ளியில் பணியில் சேர்வதற்காக பல நபர்களிடம் பணம் வாங்கியதாக புகார் கொடுத்தாரா என்றால், நானும் கொடுத்தேன், அவரும் கொடுத்தார். நான் என்ன

புகார் கொடுத்தேன் என்றால், எனது தகப்பனார் பெயரில் 5 ஏக்கர் நிலம் இருந்தது. அதில் என்னை விவசாயம் செய்யவிடாமல் தடுத்தார், அதற்காக புகார் கொடுத்தேன். சிந்தாமணிப்பட்டி காவல்நிலையத்தில் என் தகப்பனார் கொடுத்த புகாரின் அடிப்படையில் என்னையும், என் பெற்றோரையும் அழைத்து விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். விசாரணை செய்து வழக்கு முடிக்கப்பட்டது. மேற்படி புகாருக்கு பின்னிட்டு அ.வ.எண் 168/2001 வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை, புகார் 2005ம் வருடத்திற்கு பின்னிட்டு கொடுத்தேன். எனது தகப்பனார் 2001ம் வருடத்திற்கு முன்பே என்மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது பெற்றோரை அவர்களது வயோதிக காலத்தில் நான் பராமரிக்கவில்லை என்றால் சரியல்ல. யாரிடமும் அவர்கள் இல்லை, கடைசிவரை தன்னிச்சையாகவே இருந்தார்கள்.

6) அ.வ.எண்.1057/2012 வழக்கு ஆரோக்கியத்திற்கு வாரிசு சான்றிதழ் கேட்டு லீமா அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து எனது தாயாரிடம் இருந்து நான் ஏமாற்றி எழுதி வாங்கிக் கொண்டதால் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் சொத்துக்கள் குறித்து இதே வாதிகள் பாகம் கேட்டு குளித்தலை சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியாகிய என் மனைவி இவ்வழக்கில் ஆஜராகி பதில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை பொறுத்து என் பெயரில் உள்ள செட்டில்மென்ட் ஆவணம், நான் என் மனைவிக்கு எழுதிக் கொடுத்த தான செட்டில்மென்ட் ஆவணம் இரண்டும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**